# சங்கப்பாக்களில் இயற்கை வருணனை

# Nature Commentary on Sangam Poetries

**முனைவர் வ.சந்திரசேகர்**, கௌரவ விரிவுரையாளர், அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி.

**Dr V.Chandrasekar,** Department of Tamil, Guest Lecture, Government Arts College, Paramakudi

DOI : 10.5281/zenodo.6536507

## Abstract

Ancient man was sad to see the beauty of nature. Such scenes prompted to know the personality of nature. The beauty of nature is that there are no senses that take away the mind and don't describe it. The time of the emergence of human civilization is touching and nature is intertwined with human life. Poets were capable of enriching with nature and singing with their proficient and literary techniques. This means they have dealt with commentary in order for others to get the pleasure they have received. All of the works are great because all of the commentaries are connected and composed with nature. Such natural years are described in the association literature as describing nature that appears on every land through land.

## ஆய்வுச் சுருக்கம்

இயற்கையின் அழகினைப் பண்டைய மனிதன் கண்டு துய்த்தான். இத்தகைய காட்சிகள் இயற்கையின் ஆளுமையை அறிய தூண்டியது. இயற்கையின் அழகில் மனதைப் பறிகொடுத்து அதை வர்ணிக்காத புலவர்களே இல்லை. மனித நாகரீகம் தோன்றிய காலம் தொட்டு இயற்கை மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. கவிஞர்கள் தம் புலமை நயத்தாலும் இலக்கிய உத்திகளாலும் வர்ணனைகள் இயற்கையோடு மெருகேற்றி நயம்படப் பாடுவதில் வல்லவர்களாக விளங்கினர். அதாவது தான் பெற்ற இன்பத்தை பிறரும் பெறுவதற்காக அவர்கள் வர்ணனையை கையாண்டுள்ளனர். வர்ணனைகள் அனைத்தும் இயற்கையோடு இணைந்தும் இயைந்தும் விளங்கியதால்தான் படைப்புகள் அனைத்தும் சிறக்கின்றன. இத்தகைய இயற்கை வருணனைகள் சங்க இலக்கியங்களில் நிலங்களின் வாயிலாக ஒவ்வொரு நிலத்திலும் தோன்றும் இயற்கையை வர்ணிப்பதாக அமைகின்றது.

**Keywords :** சங்க இலக்கியம், தொல்காப்பியம், இயற்கை, வர்ணனை,

## முன்னுரை

இயற்கையின் அழகினைப் பண்டைய மனிதன் கண்டு துய்த்தான் இத்தகைய காட்சிகள் இயற்கையின் ஆளுமையை அறியத் தூண்டியது. புலனுக் காட்சியால் காண்பதும், பிறரால் ஆக்கப் பெறாததுமான அதன் தன்மையை உணர்ந்து இயற்கை எனப் போற்றுவாராயினர். இயற்கையைக் கண்டு வியந்த மனிதன் காலப்போக்கில் இயற்கைப் பின்னணியோடு தன் செயல்களை மனிதன் ஒப்பிட்டு அனுபவிக்க முயன்றான். பின்னர் இயற்கையில் உள்ள உயிரினங்களிடம் பகுத்தறிவுள்ள மனித பண்புகளைப் புகுத்திப் பார்த்து மகிழ்ந்தான். இயற்கையின் அழகில் மனதைப் பறி கொடுத்து அதை வர்ணிக்காத புலவர்களே இல்லை. மனிதர்களுக்கு ஒளியும், உணர்வும் அறிவும் தரும் இயற்கை,

கவிஞர்களின் கவிதைக்குத் துணையாகவும், தூண்டுகோலாகவும் விளங்கும் இயல்புடையது. இலக்கியம் தோன்றுவதற்கு ஆதாரமாக உள்ள பொருள்களில் இயற்கையும் ஒன்றாகும். மனித நாகரிகம் தோன்றிய காலம் தொட்டு இயற்கை மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. கவிஞர்கள் தம் புலமை நயத்தாலும், இலக்கிய உத்திகளாலும் வர்ணனைகள் இயற்கையோடு மெருகேற்றி நயம்படப் பாடுவதில் வல்லவர்களாக விளங்கினர் அதாவது தான் பெற்ற இன்பத்தை பிறரும் பெறுவதற்காக அவர்கள் வர்ணனையை கையாண்டுள்ளனர். வர்ணனைகள் அனைத்தும் இயற்கையோடு இணைந்தும் இயைந்தும் விளங்கியதால் தான் படைப்புகள் அனைத்தும் சிறக்கின்றன. இத்தகைய இயற்கைகள், இலக்கியங்கள் சிறக்க காரணமாக அமைகின்றன. சங்க இலக்கியங்களில் இயற்கை வருணனைகள் இடம்பெறும் தன்மையினையும் அதன் சிறப்பினையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது

**இயற்கை**

இயற்கையைப் பாடுகின்ற புலவன் அசலுக்கு நகல் தேடும் கலையையே செய்கின்றான். இப்பண்பு இரண்டாநதாரத்தது என்பர் அரிஸ்டாட்டில்"[1] இயற்கை என்னும் தமிழ்ச்சொல்லினை இயல+கை என்னும் இரண்டு சொற்களாகப் பகுப்பர். இயல் என்னும் பகுதிக்கு ஒழுங்கு, குணம், கூறுபாடு, தன்மை, பொருத்தம், செலவு, வீதி, நட என்னும் பல்வகைப் பொருள்கள் உள்ளன. கை என்னும் சொல் அறுவகைப் பொருள் குறித்து நிற்பதை,

**"ஒப்பனை படையுறுப் பொழுக்கஞ் சிறுமை**
**கரமும் பின் பிறந்தாளுங் கையே"2 (பிங்கல நிகண்டு ப.3429)**

என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. இவற்றால் ஒழுங்குறப் பொருந்திய காட்சி மற்றும் செயல்களை இயற்கை என்னும் சொல் சுட்டுவதும் இயல்பான தன்மையில் மாறுபடாது நிற்பதும் இயற்கை என்பது பெறப்படுகின்றது. தொல்காப்பியரும் இயற்கைப் பொருளைப் பற்றி கூறுமிடத்து இத்தன்மையது என்று வரையறைப்படுத்திக் கூறுகிறார். இதனை,

**"இயற்கைப் பொருளை இயற்றெனக் கிளத்தல்" (தொல்.சொல். கிளவி.நூ 502)**

என்ற நூற்பாவில் இயற்கைப் பொருள் இயற்கையாகத் தோன்றும் என்றும்,

**"செயற்கைப் பொருளை ஆக்கமோடு கூறல்" (தொல்.சொல்.கிளவி நூ.503)**

என்ற நூற்பாவில் செயற்கைப் பொருள் ஆக்கம் உருவாக்குதல் செயலாகும் என்றும் உணர்த்துகின்றார்.

"மாந்தர் தம் புலன்களால் உணரக்கூடிய புறவுலகாய் விளங்குவதே இயற்கை என்பர்"[2] தனிநாயக அடிகள். தொல்காப்பியர் சுட்டும் நிலமும் பொழுதும் இரண்டன் இயல்பே இயற்கை"[3] என்பது பரிமனம் கருத்தாகும். இயற்கையை இறைவன் உடலாகத் திரு.வி.க சொல்கிறார்."[4] மேலும் "கட்புலனுக்கு எட்டாத இயல்புடைய இறைவன் யாவரும் காணும் இயற்கையாக வடிவு கொண்டு எளியோர்க்கு அருள்புரிவதாகவும் அவர் கருதுகின்றார்."[5]

இயற்கை என்பது இயல்பானது இறைமைத் தன்மை கொண்டது. இயற்கை பொதுவாக பார்க்கக்கூடியது. நுகரக்கூடியது, வியப்பாக உற்றுநோக்கக் கூடியது. சிறப்புத்தன்மை

பொருந்தியது என்று கூறலாம். இயற்கையை அறிவியலாக மானுடவியலாக, இயற்பியலாக காண்போரும் உண்டு. "இலக்கிய படைப்புகளில் படைப்பாளிகளின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் உரியனவாய்த் திகழ்வது இயற்கை. இவ்வியற்கையை மனிதன் தனது வாழ்வோடு ஒட்டிப்படைத்து மிளிர்ந்து நிற்கின்றான். தன் உள்ளத்தின் கலை ஆற்றலால் இலக்கியங்களைப் படைக்க கலையுலகின் இலக்கியப்படைப்பில் இயற்கை ஒரு பாடுபொருளாய் அமைந்து பெருமை சேர்க்கிறது."[6] என்பதால் இயற்கையின் அளப்பரிய பண்புகள் புலனாகின்றது.

**வர்ணனை மரபு**

முன்னோர் கூறியதைப் பொன்போல் போற்றல் மரபு. மரபு மாறாமல் என்றும் நிலைத்து நிற்பது. மேலும் கவிதைத் துறையில் மரபு என்பது உள்ளத்தே எழுகின்ற உணர்ச்சியானது சொல்வடிவங்களில் ஆடை புனைந்து வெளிவருகின்றது. அவ்வாறு உணர்ச்சிக்கு வாய்க்கின்ற கோலமே கவிதைத் துறையில் மரபு என்ற நிலை பெறுகின்றது."[7] என்றும் கூறுவர். இயற்கையிலும், மனித உணர்ச்சியிலும் விரவிக்கிடக்கும் அழகினைக் காண்பதற்கும், உணர்வதற்கும் பண்டைப் புலவர்களின் சங்கச் செய்யுள் மரபுகள் நமக்கு உதவுகின்றன. கலையுகத்து விதிகளும், மரபுகளும் இயற்கையின் மீது செயற்கையாகத் திணிக்கப்படவில்லை. இயற்கையை ஊடுருவி நோக்கி அதிலிருந்து கண்டறியப்பட்ட விதிகளும் மரபுகளுமே பண்டைப் புலவர்களால் மதிக்கப்பட்டன"[8] என்பதால் மரபுகளின் இன்றியமையாமையை நாம் உணரலாம்.

கண்ணால்பார்ப்பதை மனம் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறதோ அவ்வாறே பாடும் இயல்பு பல்கியிருந்த காலம் அது. இயற்கைக் காட்சியினைக் கவிஞர் கண்டு உள்ளபடியே அதை வர்ணிப்பான். இயற்கையின் தன்மையை மாறுபடாது கூறுவான். தான் கண்ட சில காட்சிகளைக் கொண்டு காணாதவைகளையும் ஒன்றுகூட்டிப் படைக்கிறான். "இயற்கையில் பெரிய தோற்றத்தையும் உயரத்தையும் செழிப்பையும் பார்ப்பவருக்கு வியப்பையும் ஏற்படுத்துவது மலை"[9] இத்தகைய மலையை வருணிக்காத கவிஞர்கள் இல்லை என்றே கூறலாம்.

கலை வடிவம் கொண்ட சிலைகளை வடிக்கத் தேவையான கற்களைக் கொண்டிருப்பதால் மலையானது தலை உயர்த்தும் கடல் கூட அசையாது என்ற அகம்பாவத்தை தலைகனத்தால் நிமிர்ந்த தோற்றம் கொண்டு நிற்கிறது. இதனை,

**"நில மகளின் அழகுமுக மேடு பள்ளம்**
**நித்திலம் சூழ் மலைமுகமடாய் எங்கும் தோன்றும்**
**குலமகளைக் குளிப்பாட்டும் குவளைநீரால்**
**குளிராட நனைவது போல் அருவி வீழும்"**

**(ஆய்வுக் கோவை,2011, ப.2476)**

என மலைத் தோற்றம் வருணிக்கப்படுகிறது. தண்ணீர் பெருக்கெடுக்க வழியமைக்கும் அதைக் கண்டு மனம் மகிழ அழகினை வழங்கும் நாளெல்லாம் புகழ் பேச இடம் கொடுக்கும் மலை என மலையின் சிறப்பினை வர்ணிக்கப்படுகிறது.

**இயற்கையோடு இயைந்த வாழ்வு**

மானிடரின் காதல் ஓவியங்களுக்கு மிகச் சிறந்த பின்னணியாக அமைவது இயற்கைக் காட்சி இவ்வகையில் ஐந்து நிலத்துக் காட்சிகளையும் அழகுபட தீட்டியுள்ளனர். சங்கப்புலவர்கள்

அவற்றைக் காதல் நாடகத்திற்கு ஏற்ற அரங்கு என்ற அளவோடு அவர்கள் நிறுத்திவிடவில்லை. தலைவன் தலைவியர் தம் உள்ளத்தே தோன்றும் திகைப்பையும், களைப்பையும் இயற்கைக் காட்சிகளில் கண்டார்கள். சூழ்ந்துள்ள இயற்கையெல்லாம் அவர்களோடு ஒன்றிவிட்டதாக உணர்ந்தார்கள். தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து இயைந்து ஒன்றி விட்டது போல் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் துயருற்ற போது இயற்கையும் துயரால் துவண்டது என்றனர். காதலரின் களிப்பைப் பெருக்கிவிட்டது. அவர்களோடு ஒன்றிவிட்ட இயற்கை காதலர்கள் வாழ வருந்திய போதும் அந்த அனுபவம் கைவரும்போது இயற்கையும் மனிதனும் இரண்டறக் கலந்திடும் ஒன்றிய நிலை ஏற்படுவதைக் காணலாம். சில வேளைகளில் தலைவி முதலானவர்களின் உணர்ச்சிகளை இயற்கையோடு இயைந்து விடுவதற்காக இயற்கைப் பொருட்களுக்கு உயிரும் உணர்வும் கொடுத்துப் பாடுவதும் உண்டு. இது போன்ற பாடல்களில் உள்ளத்து உணர்வின் ஆழமும் அதனோடு பிணைந்த நம்பிக்கையின் உறுதிப்பாடும் புலப்படும். மனித உணர்வின் மறுபதிப்பாகவே இயற்கை வருணிக்கப்படுவதையும் காணலாம். இந்த நிலையைத்தான் பால்கிரேவ் மானிட உணர்ச்சி கொண்டே இயற்கை புனையப்படுகிறது என்கிறார். அதாவது மனிதனின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளதால் இயற்கையை வருணிப்பது இயல்பாகவே வருகின்றது.

**குறிஞ்சிநில வருணனை**

இயற்கைதான் மனிதனுக்கு முதன்மைப் பொருளாக விளங்குகிறது. ஐவகை நிலைப்பாட்டை நோக்கும் போது இயற்கையின் மூலம் மனிதன் தன்னுடைய வாழ்க்கை முறையை நிலத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டான் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை

**"மாசு அறக் கழீஇய யானை போலப்**
**பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த்துறுகல்"**

**(குறுந்.பா. எண் 13)**

என்ற இப்பாடலில் குறிஞ்சி நிலத்தை வர்ணிக்க கபிலர் குறிஞ்சி நில உயிரினமான யானையை ஒப்புமைப்படுத்துவதை நோக்கும் போது அவரின் குறிஞ்சி நிலம் பற்றிய அழகிய சிந்தனை வெளிப்பட்டு நிற்கிறது. மேலும் மழைப் பொழிவின் போது மலை தூய்மையாகவும் மிக்க அழகுடனும் காட்சியளிப்பதை இன்றைய நிலையிலும் காணலாம்.

மழையின் ஒரு அங்கமான அருவியைப் பற்றி கூறும் புலவர் மலையில் பாய்ந்து வரும் வெள்ளிய அருவிகள் பாறை வெடிப்புகளில் புகுந்து இனிய ஓசையை எழுப்புவதையும் அத்தகைய அருவி பாயும் பரப்பில் அழகிய சோலைகள் இருப்பதையும் அங்கு, குறவனின் வீட்டில் அழகிய இளம் குறப்பெண்ணைத் தலைவன் காதலிப்பதையும் கபிலர் கூறுவதை,

**"மால் வரை இழிதரும் தூவெள் அருவி**
**கல் முகைத் ததும்பும் பல்மலர்ச்சாரல்**
**சிறுகுடிக் குறவன் பெருந் தோட் குறுமகள்"**

**(குறுந். பா.எண்.95)**

என்ற இப்பாடலில் அருவிகள் பாயும் உயர்ந்த மலை நிலத்தில் இயற்கையே அரணாகக் கொண்டு தமிழர்கள் குடிலை அமைத்து வாழ்ந்த தன்மையை அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும் மலை நிலம் மற்ற நிலங்களைக் காட்டிலும் மழையும் குளிரும் அதிகப்படியாக இருக்கும் இயற்கை நிகழ்வையும் கபிலர் படம்பிடித்துக் காட்டுகிறார். இங்கு இடைவிடாது மழை பொழிந்து கொண்டிருக்கும் காரணத்தினால் மயில்களும் குரங்குகளும் குளிரால் நடுங்குவதைக் காணமுடிகின்றது. இதனை,

**"இனமயில் அகவும் மரம்பயில் கானகத்து**
**நிரைமுக ஊகம் பார்ப்போடு பனிப்ப**
**படு மழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்**
**குன்றம் நோக்கி னென்"**

**(குறுந்.பா. எண்.249)**

என்ற பாடலில் மிகுதியாக மழைப் பொழியும் ஓர் இடமாக மலை நிலம் விளங்குவதைக் காண முடிகிறது. மரம் வளர்ப்போம் மழை பெறுவோம் என்று இன்றைய நிலையில் அரசு மக்களை அறிவுறுத்தி வருகிறது. இதன் மூலம் மழையின் ஆதாரம் மரங்களே என்பது தெளிவாகிறது. இங்கு கபிலர் கூறும் மலையில் மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருப்பதை உற்று நோக்க வேண்டும். இதன் மூலம் மரம் வளம் நிறைந்த பகுதியில் இடைவிடாது மழை பொழியும் என்ற உண்மைத் தத்துவத்தை இயற்கை வாயிலாக கபிலர் வெளிப்படுத்திச் சென்றுள்ளார்.

தமிழர்கள் சங்க இலக்கிய காலத்தில் இயற்கையோடு இயைந்தே தம் வாழ்வை அமைத்துக் கொண்டனர். குறிப்பாக தங்களின் வாழ்வை இயற்கைச் சூழ்ந்த இடத்தில் அமைத்து வாழ்ந்துள்ளனர். தம்முடைய உணவு வகைகளாகிய பலாப்பழம், தேன், கிழங்கு போன்றவற்றை உண்ணுவதன் மூலம் இவர்களுக்கும் இயற்கைக்கும் இருக்கும் நெருக்கம் வெளிப்படுகிறது. மேலும் இயற்கை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் பயிர் வைக்க ஏற்ற உணவினைப் பயிரிடுவது இயற்கையை இவர்கள் புரிந்ததன் அளவுகோல் எனலாம்.

குறவர்களின் குடிசைகள் மலையில் உள்ளது. அத்தகைய குடிசைகளை மலை மறைக்கின்றது. இங்கு மலை, குறவனின் வீட்டை மறைக்கும் என்பது மலையின் மேல் மேகம் இறங்கும் போன்ற நிகழ்வாகும். இத்தகைய அழகிய இயற்கை சூழ்ந்த மலையில் குற இனத்தவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அவர்களின் இயற்கை வாழ்வைப் புலப்படுத்தும் நிகழ்வாகக் கொள்ளலாம். இதனை,

**"குன்றக் குறவன் புல்வேய் மும்பை**
**மன்று ஆடு இளமை மறைக்கும் நாடன்"**

**(ஐங்குறுநூறு.பா. எண்.252)**

என்ற இப்பாடலின் மூலம் குறவரின் இயற்கை வாழ்வை அறிய முடிகின்றது.

ஒவ்வொரு நிலத்தின் இயற்கை வளத்திற்கும் ஏற்றார்போலத் தாவர வளர்ச்சியும் மாறுபடுகின்றன. குறிஞ்சி மண்ணில் தழைத்து வளரக் கூடிய தாவரங்களான வாழை, பலா, சுரபுன்னை, தேக்கு, சந்தனம், மூங்கில், காந்தள் போன்ற பலவகைப்பட்ட தாவர வகைகளை சங்கப் புலவர்கள் குறித்துச் சென்றுள்ளனர். இவர்களின் குறிஞ்சி சார்ந்த தாவரங்களின் பார்வை இன்றைய நிலையிலும் பொருத்தமாக அமைவதை நம்மால் அறிய முடிகிறது. மேலும் அகநானூற்றுப் பாடலொன்றில் பெரிய ஆண் பன்றியைக் கொன்ற ஆண்புலி, அப்பன்றியை பலா

மரங்களும், மூங்கிலும், சுரபுன்னை மரங்களும், வாழை மரங்களும் ஓங்கி வளர்ந்துள்ள அடர்ந்த காட்டில் இழுத்துச் செல்கிறது. இத்தகைய நிகழ்வு மலைச்சாரலில் நிகழ்கிறது. இதன் மூலம் குறிஞ்சித் தாவரங்கள் வளரும் சூழல் வெளிப்படுகிறது. மேலும் சுரபுன்னை, வாழை ஆகிய தாவர இனங்களுக்கு அதிக நீர்த் தேவை என்ற நுட்பமும் பெறமுடிகிறது. இவ்விரு மரங்களும் நீர் வற்றாத குழிக்கு அருகில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.இதன் மூலம் குறிஞ்சியில் இயற்கைத் தாவரத்தில் வளரியல்பு பெறமுடிகிறது. இதனை

**"கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை**
**பலரஅமல் அடுக்கம் புலாவ ஈர்க்கும்**
**கழை நரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு"**

**(அகம். பா. எண்.8)**

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு குறிஞ்சி நிலம் மனிதனுக்கு மட்டுமின்றி விலங்குகளின் வாழ்விற்கும் ஆதாரமாக விளங்கி கொண்டிருக்கிறது. குறிஞ்சி நிலத்தில் வாழக்கூடிய உயிரினங்களில் புலி, கரடி, குரங்கு, மயில், கிளி போன்றவற்றைக் குறிப்பிடலாம். குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளத்தை ஆதாரமாகக் கொண்டே இவ்வுயிரினங்களின் வாழ்க்கை முறையும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**முல்லை நில வருணனை**

காடும் காடு சார்ந்த இடமாகிய முல்லை நிலக் காட்சி இலக்கியத்தில் நிலம் புறம், கானம், காடு, கான், வன்புலம், மென்புலம் ஆகிய சொற்களில் இடம்பெறுகின்றன. முல்லை நிலத்திணை நோக்கி பொன்போல மலர்ந்த கொன்றையும், மணியென ஒளிரும் காயாம்பூவும் பூத்துக் குலுங்கும் தோன்றியும் உன்னை அணி செய்கின்றன. தலைவியைக் கண்டு அளவளாவும் நின்நிலம் நலம் கண்டு திளைக்கவும் வருகின்றேன் என்று கூறுவதை,

**பொன் என மலர்ந்த கொன்றை மணி எனத்**
**தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு**
**நன்னலம் எய்தினை புறவே! நின்னைக்**
**காணிய வருதும் யாமே**
**வாள்நுதல் அரிவையொடு ஆய்நலம் படர்ந்தே"**

**(ஐங். பா.எண்.420)**

என்ற பாடலடிகளில் தலைவியின் அழகினைக் காண வருவேன் என்று கூறுவதை அறியமுடிகிறது. தன் கடமை முடிந்து மீளும் தலைவன் முல்லை நிலத்தைக் கடக்கும் போது ஒரு காட்சியைக் காணகின்றான். கண்டு உள்ளத்தில் கனிவு எய்துகிறான். கருக்கொண்ட பெண்மானை மேய விடுத்து தண்ணீர் ஓடைக் கரையில் தூங்கவும் விடுத்து ஆண்மான் அசைபோட்டுக் காவல் காத்து நிற்கும் அன்பமைந்த காட்சியே அவன் உள்ளத்தை உருக்கியது. இயற்கை அழகு அவன் கண்ணுக்குள் காட்டிய இக்காட்சி அவனது உள்ளத்திலே தலைவியைக் கனிவோடு கண்டு பேணும் அன்பினை உருவாக்கியது. உடனே தேரினை விரைந்து செலுத்தப் பாசனை ஏவியதை,

**"சிறு கரும் பிடவின் வெண்தலைக் குறும்புதல்**
**கண்ணியின் மலரும் தண் நறும் புறவில்**
**தொடுதோற் கானவன் கனவ பொறுத்தன்ன**
**இரு திரி மருப்பின் அண்ணல் இரலை"**

**(அகம். பா. எண்.34)**

என்ற இப்பாடலில் வினைவயிற் பிரிந்த தலைவன் செய்வினை முடிந்து மீண்டு வரும்போது தலைவியைக் கண்டு அவளை நாம் பெற வேண்டும் என்ற விருப்பத்தினைத் தேர்ப்பாகனுக்குக் கூறுவதை அறியமுடிகின்றது. இங்கு இயற்கை வாழ்வியலை விளக்கப் பின்னணியாகிறது.

செங்கதிர்களைக் கொண்ட கதிரவனின் கடுஞ்சினம் குறையவும் கொடி முல்லைப் பூத்து மணம் வீச வண்டுகள் ரீங்காரம் செய்தன. நீரைச் சுமந்த கார்மேகங்கள் வானத்தில் படர்ந்தன. அவற்றைக் கண்டு மயில்கள் தோகை விரித்தாடி அகவின. இடியுடன் மின்னல் தோன்ற மழையுடன் வானம் எழிற்கோலம் கொண்டது. பிரிந்த தலைவனோ குறித்த காலத்தில் வரவில்லை என்பதை,

**"செங்கதிர்ச் செல்வன் சினம் கரந்த போழ்தினால்**
**பைங்கொடி முல்லை மணம் கமழ் வண்டு இமிர**
**காரோடு அலமரும் கார் வானம் காண்தோறும்**
**நீரோடு அலமலரும் கண்"**

**(ஐந்திணை எழுபது, பா. எண் 15)**

என்று முல்லைக்குரிய இருத்தல் அகவொழுக்கத்தின் வழியே கற்பின் சிறப்பைச் சித்தரிக்கும் வண்ணம் இப்பருவத்துக் காட்சியினை ஐந்திணை எழுபது எடுத்தியம்புகிறது.

இவ்வாறு முல்லை நில வருணனையில் தலைவன் தலைவியின் இன்பச் சூழலை, முல்லைத் திணையில் மலர்ந்த பூக்களின் மூலம் அழகியல் தன்மையுடன் வருணித்துள்ளதைக் காணமுடிகின்றது.

**மருதநில வருணனை**

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். இலக்கியங்கள் மருத நிலப் பகுதிகளை கழனி, பானம், வயல், செறு என்ற சொற்களால் குறிப்பிடுகின்றன. கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் வகையில் வளர்ந்த ஓர் எருமைக்கடா துறை ஓரங்களில் மீன்கள் மேயும் பொய்கையிலே பூத்து செழித்த ஆம்பல் மலர்களை மேய்ந்தது, மேய்ந்த களைப்போடு குழம்பிக் கிடந்த சேற்றிலே இரவெல்லாம் தூங்கிற்று பொழுது புலர்ந்த பிறகு மெல்ல அசைந்து அசைந்து வரும் உணர்ச்சியும் இல்லாமல் தன்வயம் இழந்த மதிப்பிலே எழுந்தது எருமைக்கடா. அதன் வலியகால்களிலே சிக்கி வரால் மீன்கள் சிதைந்தன. இவ்வளவு சிறப்புடன் புறப்பட்டுவிட்ட எருமைக்கடாவலியிலே பூத்திருந்த பகன்றைக் கொடியைச் சூடிக்கொண்டது. அதாவது வழியில் வரும்போது அந்தக் கொடி தானே கடாவின் கொம்பிலே சிக்கிக்கொண்டது. இந்த வெற்றி மாலையோடு ஊருக்குள்ளே புகுந்தது. புகும் காட்சி ஏதோ பெரிய பெரிய போர்களிலே வெற்றி கொண்ட வீரரின் காட்சி போல இருந்தது என்பதை,

**" துறை மீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை**
**அரி மலர் ஆம்பல் மேய்ந்த நெறி மருப்பு**
**ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து"**

**(அகம். பா. எண் 316)**

என்ற இப்பாடலில் எருமையின் செயல்களைத் தலைவனோடு ஒப்பிட்டு வர்ணித்துள்ளதைக் காணமுடிகின்றது.

பரத்தையிடம் சென்ற தலைவன் மீண்டும் தலைவியை நாடி ஊடல் தணிக்க தலைவியை வேண்டுகிறான். இதற்குத் தோழி மறுப்பு தெரிவிக்கிறாள். அப்போது தலைவனின் ஊரின் அழகினைக் கூறும்பொழுது,

**" தடமருப்பு எருமைப் பிணர்ச் சுவல் இரும் போத்து**
**மடநடை நாரைப் பல்இனம் இரிய**
**நெடுநீர்த் தண் கயம் துகுமெனப் பாய்ந்து**
**நாட் தொழில் வருத்தம் வீட சேண் சினை**
**இருள்புனை மருதின் இன் நிழல் வதியும்**
**யாணர் ஊர"**

**(நற். பா. எண்.330)**

என்ற இப்பாடலில் வளைந்த கொம்பையும் சொரசொரப்பான பிடரியும் உடைய கரிய எருமைக்கடா அது. இள நடையை உடைய நாரையின் இனம் யாவும் குலைந்து விலகுமாறு ஆழமான நீர் நிரம்பிய குளிர்ச்சி பொருந்திய குளத்தில் திடுமெனப் பாயும் அங்ஙனம் சிறப்பு வாய்ந்த எருமை காலைப்பொழுதில் உழு தொழில் புரிந்த வருத்தம் நீங்குமாறு உயர்ந்த கிளை உடையதும் இருள் புனைந்தது போன்று இனிய நிழல் உடையதுமான கிளையுடன் ஏதும் இருந்தது போன்று இனிய நிழல் உடையதுமான மருத மரத்தின் நிழலில் தங்கி இருக்கும் இத்தகைய இயல்புடைய எருமைகளை உடையதும் புதிய வருவாயை உடையதுமான ஊரினை உடையவனே என்று கூறுகிறாள்.

தலைவன் பரத்தை காரணமாகப் பிரிந்து சென்று திரும்பி வந்து தோழியின் வாயிலாக உதவ வேண்டுகிறான். அதற்குத் தோழி தலைவனின் ஊரின் சிறப்பை எடுத்தியம்பிய காட்சியை,

**"மணி நிற மலர்ப் பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம் தன்**
**அணிமிகு சேவலை அகல் அடை மறைத்தென**
**கதுமென காணாது கலங்கி அம்மடப் பெடை"**

**(கலித்.பா. எண்.70)**

என்ற இப்பாடலில் மணியினது நிறம் போன்ற நீரினையும், மலர்களையும் உடைய பொய்கையிலே சேவலோடு விளையாடும் அன்னப்பேடை தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரை இலை மறைத்ததாக அதனைக் காணாது வரையக் கலங்கியது. அறியாமையுடைய அப்பேடை முழுமதியின் நிழலைக் கண்டது. அதனைச் சேவல் எனக் கருதி உவந்து ஓடிச் சென்றது அந்நிலையே தன்னைச்

சேர்வதற்கு எதிரே வருகின்ற சேவலைக் கண்டு மிகவும் நாணி பல மலர்கள் செறிந்துள்ள இடத்திற்கு போய் ஒளிந்து கொண்டது. இத்தகு ஊரை உடைய தலைவனே என்று தோழி கூறுகிறாள். இங்கு உணர்வுகளின் வெளிப்பாடாக இயற்கையை வர்ணித்துள்ளனர். இவ்வாறு மருதத் திணையின் நிலத்தினை உணர்வுகளின் அடிப்படையில் வருணனைச் செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**நெய்தல் திணை வர்ணனைகள்**

நெய்தல் நில காட்சியினை தலைவனைப் பிரிந்த தலைவி கடலும் கானலும் காணுந்தோறும் இரக்கம் மிகுதலால் கடலையும் கடலைச் சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றனர். அன்றியும் கடற்கரைக் கழிகளில் நெய்தல் மலர் சிறந்து விளங்குவதாலும் நெய்தல் என்ற பெயர் வந்ததாகக் கொள்ளலாம்"[10] என்பார் சாம்பசிவனார்.

தொல்காப்பியர் நெய்தல் நிலத்தைப் பெருமணல் உலகம் என்றே முதலில் குறிப்பிடுகிறார். பின்னரே அதற்கானப் பெயரை நெய்தல் என அறிமுகப்படுத்துகிறார். இதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் நெடுங்கோட் டெக்கர் நிலன் அதாவது அந்த அளவிற்கு பரந்து கிடக்கும் மணற்பாங்கான பூமி என மொழிகிறார். "கடலில் வாழும் உயிரினங்களுக்கும், கடற்கரைப் பகுதியில் வளரும் உயிரினங்களுக்கும் முதன்முதலில் பெயரிட்டழைத்தவர் நெய்தல் நில மக்களே ஆவர்"[11]என்பர் ராஜப்பன். நெய்தல் நிலத்தில் வாழும் மக்களைப் பரதவர், பட்டினவர் , செம்படவர், மீனவர் என்று அழைப்பர்" [12] இருதயநாத்.

தலைவன் வரைவு நீட்டியதை சுட்டிக்காட்டிய தோழி அவன் ஊரினைக் கூறும் போது முழங்குகின்ற அலை கொண்டு வந்து சேர்த்த பெரிய எக்கர் மணலை மென்மையான துகிலின் அசைவைப் போலத் தோன்றுமாறு ஒருசேரக் காற்றுத் தூற்றும் அத்தகைய நீர் மிகுந்த வலிய கடற்கரைக்குத் தலைவனே என்று கூறியதை,

**" முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்**
**நுணங்கு தூகில் நுடக்கம் போல கணம் கொள**
**ஊதை தூற்றும் உரவு நீர்ச் சேர்ப்ப"**

**(நற். பா. எண்.15)**

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது. கடற்கரைச் சோலைகளில் புன்னையும், தாழையும் இருப்பது இயற்கைப் புன்னை மலர்களும், தாழம்பூ பூக்களும் கானலுக்கு நறுமணம் ஊட்டுவதை,

**"உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்**
**மிகுமீன் உணக்கிய புது மணல் ஆங்கண்**
**கல்லென் சேரிப் புலவற் புன்னை**
**விழவு நாறு விளங்கு இணர் அவிழ்ந்துடன் கமழும்"**

**(நற். பா.எண் 63)**

என்ற பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

சிப்பியிற் பிறக்கும் முகத்திலும் சங்கில் சிறந்த முத்துச் சிறந்தது என்பர் . கடற்கரையில் வாழும் மீனவ குலத்தினர் தாம் கண்டெடுத்த சங்குகளில் இருந்து கிடைக்கும் முத்துக்களை ஏனைய நிலத்தில் வாழும் மக்களுக்கு விற்பனை செய்வார் என்பதை,

**"வளைபடு முத்தம் பரதவர் பகரும்"** **(ஐங். பா.எண்.195)**

என்ற வரி பகருகிறது.

புன்னை மரத்தின் அழகினைக் கூறும்பொழுது புன்மயம் இரும்பைப் போன்ற நிறமுடைய கரிய கிளைகளை உடையது. நீலம் போன்ற பசிய இலைகளை உடையது. அவ்விலைகளில் வெள்ளி போன்று மலர்ந்து விளங்கும் பூங்கொத்துகளின் நடுவிலிருந்து பொன்துகளை ஒத்துத் தோன்றும் மணமுடைய மகரந்தம் உதிரும். புலியினது மேற்புறம் போன்று புள்ளியைக் கொண்டும் நல்ல நிறம் கொண்டு பூக்களின் மணத்தைப் பெற்றும் அமைந்த மேற்பரப்பையுடைய, வரியையுடைய வண்டுகள் அவை புன்னை மலர்களில் வந்து தேனுகரும். அங்ஙனம் நுகர்ந்த போது எழுந்த வண்டின் இசையைப் புலியின் ஓசையோ எனத் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகள் அஞ்சும் பல முறை இழுத்து நிறுத்தவும் நில்லாததாய் விரைவாக இயங்கும் குதிரையின் கால்கள் பந்தினைப் போலத் தாவின. இத்தகைய வளமுடைய நம் சேரியில் கல்லென்றும் ஓசையுடன் தோன்றியது என்பதை,

**"இரும்பின் அன்ன கருங் கோட்டுப் புன்னை**
**நீலத்து அன்ன பாசிலை அகம் தொறும்**
**வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பன்**
**பொன்னின் அன்ன நறுந் தாது உதிர"**

**(நற். பா. எண்.249)**

என்ற பாடலின் மூலம் நெய்தல் நிலத்தின் அழகினை அறியமுடிகிறது. இவ்வாறு நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதிகளில் காணப்படும் நெய்தல் நில மக்களின் வாழ்வியலை வருணனையாகக் காட்டுவதை காணமுடிகிறது.

**பாலை நில வருணனை**

சங்க காலப் பாலைநிலம் பற்றி மூன்று வகையான கருத்துகள் நிலவுகின்றன. வளமிழந்த குறிஞ்சியும் வளமிழந்த முல்லையும் ஆகிய நிலம், மிகுந்த வெப்பம் வாய்ந்த மணல்பாங்கான வறண்டநிலம் (சகாராப் பாலைநிலம் போன்றது) சுரம் (ஒரு வளம் வாய்ந்த ஊருக்கும் பிறிதோர் ஊருக்கும் இடையில் காணப்படும் கரடுமுரடான காட்டு நிலம்) என்பார். பாலையின் இயல்பை வானில் இயங்குகின்ற ஒளியினைக் கொண்ட ஞாயிற்று மண்டிலம் நெருப்பைப் போன்று செந்நிறங் கொண்டு சுட்டெரிக்கும் வெப்பம் மிகுந்த காட்டகத்தே இலைகளை இல்லையாக அரும்பு இல்லையாகப் பலவும் ஒருங்கே மலர்ந்த இலவம் பூக்கள் ஆரவாரத்தைக் கொண்ட மகளிர் கூட்டம் சேர்ந்து மகிழ்ந்து எடுத்த அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய வரிசை போலப் பொலிவு பெற்றுத் தோன்றும் என்பதை,

**"வானம்ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்**
**நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு**
**இலை இல மலர்ந்த முகை இல் இலவம்"**

**(அகம். பா.எண்.11)**

எனவரும் அகநானூறு அடிகள் கூறுவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

பாலை நிலத்தில் யானைகள் வேனில் வெம்மையிலும் உணவு உண்ட காட்சியினை யானைகளுக்கு யாமரத்தின் பட்டை உணவாக பயன்படும். பாலையின் வெம்மையால் அம்மரங்களும் பொரிந்து காணப்பட்டன. களிறு தம் கொம்பினால் மரத்தின் அடிப்பகுதியைக் குத்திக் கைகளால் பட்டைகளை உரித்துத் தன் சுற்றத்தார் உண்ண வழங்கியது என்பதை,

**"பொத்து இல் காழ அத்த யாஅத்துப்**
**பொரி அரை முழுமுதல் உருவக் குத்தி**
**மறம் கெழு தடக்கையின் வாங்கி உயங்கு நடைச்**
**சிறுகட் பெருநிரை உறுபசி தீர்க்கும் "**

**(குறுந்.பா. எண்.225)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

கடுங்கதிர் வெம்மைக்கு ஆற்றாது காய்ந்து உலர்ந்து நீரின் பசையும் நீங்கி வறண்ட மலைகளையும், காடுகளையும் காணலாம். நீரின்றி வறண்ட நிலத்தில் வாழ்ந்தாலும் அங்குள்ள விலங்குகளும், பறவைகளும் மனிதரைப் போலவே உணர்வும் உருக்கமும் நிறைந்த நெஞ்சம் உடையனவாகக் காட்சி தருகின்றன. நிலம் உலர்ந்ததே தவிர நிலத்தில் வாழ்கின்ற உயிரினங்களின் நெஞ்சம் உலர்ந்து விடவில்லை. வறட்சியின் உறைவிடமான பாலையின் நடுவில் ஓங்கி நிற்கிறது ஓமைமரம் அதன்படி மரத்தின் தோற்றம் முதலையின் முதுகுத் தோல் போன்று காணப்படுகிறது. அந்த ஓமை மரத்தின் பெரிய கிளை ஒன்றிலே பெண் பருந்து குஞ்சு பொரித்து இருக்கின்றது. பெண் பருந்து குஞ்சுகளின் காவலுக்காகக் கூட்டிலேயே இருக்க வேண்டும். இந்த நிலையில் உணவுக்கு என்ன செய்வது என்று தெரியாத போது ஆண் பருந்துக்கோ ஈன்று இளைப்பட்ட தன் பேடையின் நீங்கிப் போகவும் மனமில்லை. மனம் மயங்கிய இந்நிலையில் ஒருவாறு துணிந்து புறப்பட்டுவிட்டது. ஆண் பறந்து சென்ற சிறிது நேரத்தில் இரையுடன் திரும்பி வருகின்றது. புலியால் இரைக் கொள்ளப்பட்டு எஞ்சியிருந்த காட்டு மானின் நாறிய புலாவைப் பேடைக்கு உணவாகக் கொண்டு வருகின்றது.

**"இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன"**

**(அகம். பா.எண்.3)**

இக்காட்சியில் ஈன்று இளைப்பட்ட தன் பேடைக்காக இரை தேடும் ஆண் பருந்து ஒன்றின் ஓவியம் பாலையின் பின்னணியில் தீட்டப்பட்டுள்ளது. நீரற்ற பாலை வழியில் நீர் வேட்கை கொண்ட கலைமான் ஒன்று கானல் நீரினை உண்ணப் பெரிதும் விரும்பி விரைந்து ஓடி இளைத்து வருந்தி மெலிந்த நிலையில் அது எங்கோ மேய்ந்து கொண்டிருக்கின்ற தன் துணையை நினைத்து அழைக்கின்றது. இயற்கை நிகழ்வுகளை ஐந்து வகை நிலங்களின் அழகியல் தன்மையும் மக்கள் வாழ்வியலையும் புனைவுபடுத்தும் பொழுது அழகியல் அவைபயன்படுத்தும் பொழுது அழகியில் சுவை பிறக்கின்றது.

**முடிவுரை:**

இயற்கையின் அழகில் மனதைப் பறி கொடுத்து அதை வர்ணிக்காத புலவர்களே இல்லை எனலாம். மனிதர்களுக்கு ஒளியும், உணர்வும் அறிவும் தரும் இயற்கை கவிஞர்களின் கவிதைக்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் விளங்கும் இயல்புடையது. இயற்கையைப் புனைந்து

பாடுதலும், போற்றி வணங்குதலும் இன்று தோன்றியதன்று இயற்கைப் புனைவு தொன்று தொட்டே வளர்ந்து வந்த ஒரு சிறப்படைய கலையாகும். இசைக்கு வயப்படாதோர் உலகில் எவரும் இல்லை. அது போலவே இயற்கை இன்பத்தைத் துய்க்காதவரும் இல்லை என்பதை அறியமுடிகின்றது. வருணனை என்பது தான் கூறப் புகுந்த செய்திகளைக் கேட்டார் உணரும் படியும் சில ரசனை உணர்வுகளை ஊட்டிக் கலைச் சிறப்பு உண்டாகும்படி கூறுவது வருணனையாகும். வருணனை என்பது புலவன் கூறும் செய்திகளை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்படி அழகாக விரிந்து உரைத்தல் புலன்களால் உணர்வனவற்றை அல்லது புலன்கள் வாயிலாக உணரும் புற காட்சிகளைச் சொற்களில் மொழிபெயர்த்துக் காட்டுவதே வருணனையாகும். அத்தகைய வர்ணனையை சங்க இலக்கியங்களில் நிலங்களின் அடிப்படையில் பிரித்து வர்ணனையின் சிறப்பை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புகள்**

1.Aristatle theory of poetry and fine arts,p.121

2.Xaviers.Thaninayagam lands capeand poetry,p.22

3.அ.ம. பரிமனம், இயற்கை நாட்டியம், ப35

4. திரு.வி.க, பொதுமை வேட்டல், ப.2

5. மேலது, ப.10

6. தி.முருகரத்தினம், அரங்கத்தமிழ் கட்டுரைகள், ப.70

7.John livingslows, convertion and relotion poetry.p.32

8. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப30

9. இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக் கோவை,2011, 0.2476

10. சாம்பசிவனார், தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை, ப. 18

11.ராஜப்பன், நெய்தல், ப.20

12. பி.லோ இருதயநாத், குறிஞ்சியும் நெய்தலும், ப.113

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் வ.சந்திரசேகர் “ சங்கப்பாக்களில் இயற்கை வருணனை ”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 2, ஏப்ரல் 2022, பக். 31-42

**Cite this Article in English**

**Dr V.Chandrasekar “ Nature Commentary on Sangam Poetries”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 2, April 2022, pp. 31-42